
# சுதந்திரன்
SUTANTIRAN

● விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2008 | ற, ஆகிர்பிறை 30 | சித்திரை 8 (20-4-77) புதன் | புத்தகம் 30 | இதழ் 104

## தமிழர் விடுதலை கூட்டணியை பிளவுபடுத்த

# திரைமறைவில் யூ.என்.பி சூழ்ச்சி?

தமிழினத்தின் ஒற்றுமைக்கோட்டையாக விளங்கி தமிழ்ஈழத் தனி நாட்டுக்காக போராடிவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியை பிளவுபடுத்தும் சூழ்ச்சி வலையொன்றை சிங்கள ஐக்கியதேசியக் கட்சி திரைமறைவில் விரித்துள்ளதா? தமிழ் சமுதாயத்திலுள்ள தனது கையாட்கள் சிலருடன் கலந்து பேசி இச்சூழ்ச்சிக்கு ஐக்கியதேசியக் கட்சி திரைமறைவில் சதித்திட்டம் தீட்டியுள்ளதா? இவ்வாறன சந்தேகங்கள் இன்று தமிழ் மக்கள் மனதில் எழுகின்றன.

எது எப்படியிருந்தபோதிலும் யூ. என். பியும் அதன் கையாட்களும் போடும் எத்தச் சதித்திட்டமும் முறித்தெறியப்படும் என்பதுடன், கூட்டணியின் ஒற்றுமையும், ஐக்கியமும், தமிழ் ஈழ இலட்சியமும் நிச்சயமாகப் பாதுகாக்கப்படும் என்பதிலும் தமிழ் மக்கள் உறுதியாக இருந்துவருகின்றனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதற்கு யூ. என். பிக்கு தமிழ் பிரதிநிதிகளின் ஆதரவு தேவைப்படலாம்; தமிழ் பிரதிநிதிகளின் ஆதரவு கிடையாத விடத்து யூ. என். பி. யினலோ, சிறீலங்கா சுதந்திரக்கட்சியினலோ அரசு அமைக்கமுடியாத சூழ்நிலையும் ஏற்படலாம்! அப்படி ஏற்படுமாகுல் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் ஈழத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ளாத விடத்து எந்தச் சிங்களக் கட்சிக்கும் அரசு அமைக்க ஆதரவு தரமாட்டேன் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி மறுக்கலாம்.

இத்தகைய தர்ம சங்கடமான நிலையைத் தவிர்ப்பதற்காக, ஒன்றுபட்ட கூட்டணியை முன்கூட்டியே பிரித்துவிடும் சூழ்ச்சித்திட்டமொன்றை யூ. என். பி. திரைமறைவில் தீட்டியதுடன் தமிழர் மத்தியிலுள்ள தனது கையாட்கள் சிலருடன் இது சம்மந்தமாக அண்மையில் "குசு குசு" பேச்சுவார்த்தையும் நடத்தியதாக தெரியவருகிறது.

யூ. என். பி. விரித்துள்ள எநத வலையிலும் தமிழர் கூட்டணியும், தமிழ் பேசும் மக்களும் கிஞ்சிற்றும் சிக்கப் போவதில்லையென்று கூட்டணி வட்டாரங்கள் உறுதியுடன் தெரிவித்தன.

இது இப்படியிருக்க மூதறிஞர் தந்தை செல்வாவின் நலன் விசாரிப்பதற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்த யூ. என். பி.த் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன, நட்பு ரீதியில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நிலை பற்றி கூட்டணித் தலைவர்கள் சிலருடன் பேசியதாகத் தெரிகிறது.

தமிழ்ஈழமே தங்கள் ஒரே யொரு இலட்சியம் என்றும்

—4-ம் பக்கம் பார்க்க

## தி.மு. கழகச்செலவில் டாக்டர் ராமமூர்த்தியை இங்கு அனுப்பிவைத்தார் கலைஞர் கருணாநிதி!

மூன்று வாரங்களுக்கு மேலாக அறிவு இழந்த நிலையிலிருக்கும் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் உடல் நிலையை பரிசிலனை செய்வதற்காக உலகின் பிரசித்திபெற்ற மூளை நரம்பு சிகிச்சை நிபுணரும் சென்னையிலுள்ள தென்கிழக்காசியாவின் மிகச்சிறந்த மூளை நரம்பு சிகிச்சை நிலையத்தின் பேராசிரியருமான டாக்டர் வி. ராமமூர்த்தி அவர்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தாமே நேரடியாக முழு ஏற்பாடுகளையும் முன்னின்று கவனித்து கழகச்செலவிலேயே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார். 17-4-77 ஞாயிற்றுக்கிழமை காலை விமானமூலம் திருச்சியிலிருந்து இங்கு வந்த டாக்டர் ராமமூர்த்தி மூதறிஞர் நிலையைப் பரிசிலித்த பின்னர், 18-4-77

—4-ம் பக்கம் பார்க்க

# 'புதிய நோய்கள் ஏற்படாமலிருந்தால் செல்வாவுக்கு மிக விரைவில் நினைவு திரும்பும்!

### பேராசிரியர் ராமமூர்த்தி நம்பிக்கை

'மூதறிஞர் செல்வா அவர்களின் உடலில் புதிய நோய்கள் ஏதும் அணுகாமல் இதுகால வரை கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தது போல தொடர்ந்தும் கவனித்து வந்தால் அவருக்கு மிக விரைவில் அறிவு திரும்புவது நிச்சயம்'!

இவ்வாறு தந்தைசெல்வா அவர்களை பரிசீலனை செய்த பின்னர் சென்னை மூளை நரம்பு சிகிச்சை நிலையப் பேராசிரியர் டாக்டர் ராமமூர்த்தி சுதந்திரன் ஆசிரியரிடம் தெரிவித்தார்.

விமானத்திலிருந்து இறங்கிய டாக்டர் ராமமூர்த்தி, 'எனது முதல்வேலை நோயாளியைப் பார்ப்பதுதான்' என்று கூறியவாறே தம்மை வரவேற்க வந்தவர்களுடன் நேரடியாக யாழ்ப்பாணம் மருத்துவமனைக்குவிரைந்தார் அங்கு டாக்டர் சிவஞானவேல், டாக்டர் மண்டலேஸ்வரன் ஆகியோருடன் மூதறிஞர் உடல் நிலையையும், இது வரை அவருக்கு நடைபெற்ற சிகிச்சைகளையும் கேட்டு அறிந்துகொண்ட பின்னர் சுமார் மூன்றுமணி நேரமாக செலவாவின் உடல்நிலையை மிக நுணுக்கமாகப் பரிசோதித்தார்.

டாக்டர் கப்ராலும், மற்றும் டாக்டர்களும் தந்தை செல்வாவுக்கு உரிய நேரத்தில் உரிய சிகிச்சை அளித்து வந்திருப்பதனுல்தான் தந்தைசெல்வாவின் உடல் நிலை இன்று திருப்திகரமாக இருந்துவருவதாகப் பாராட்டுத்தெரிவித்தார்.

—4-ம் பக்கம் பார்க்க

## கலைஞர் கருணாநிதிக்கு நன்றி தெரிவித்து தந்தி!

"டாக்டர் ராமமூர்த்தி அவர்களை இங்கு அனுப்பி வைப்பதற்காக சிரமங்களை பொருட்படுத்தாது நீங்கள் எடுத்த உடனடி நடவடிககைகளுக்கு எமது நன்றி ஈழத்தில் வாழும் தமிழ் சமுதாயமும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் கால மறிந்து நீங்கள் செய்த இந்த உதவியை ஒருபோதும் மறக்கமாட்டாது. தனிப்பட்ட முறையில் எனது நன்றியையும் ஏற்றுக்கொள்ளுங்கள்!"

—இவ்வாறு சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் கலைஞர் கருணாநிதிக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் தெரிவித்துள்ளார்.

## தமிழ் இளைஞர் பேரவை மத்திய குழு கூடுகிறது!

தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டம் 23-4-77 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணி தலைமை செயலகத்தில் நடைபெறும். இன்றைய அரசியல் நிலை, தமிழ் இளைஞர் பேரவை எழுச்சி மாநாடு, மே நாள் ஒழுங்குகள் ஆகியவைபற்றி இங்கு விவாதிக்கப்படவுள்ளது.

## டாக்டர் ராமமூர்த்திக்கு தலைவர்கள் விருந்து

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களது உடல் நிலையைப் பரிசீலனை செய்வதற்காக சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த உலகப் பிரசித்தி பெற்ற மூளைநரம்பு சிகிச்சை நிபுணரும் பேராசிரியருமான டாக்டர் வி. ராமமூர்த்திக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களும் பிரமுகர்களும் இரவு விருந்தளித்துக் கௌரவித்தனர். இவ்விருந்து 17-4-77ஞாயிறு இரவு யாழ் சுபாஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இவ்விருந்தில், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், முன்னுள் மூதவை உறுப்பினர் அ. நடராசா, டாக்டர்கள் சிவஞானவேல், மண்டலேஸ்வரன் சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், சட்டத்தரணி திரு. எஸ். ஸி. சந்திரகாசன், இரா. வடிவேற்கரசன், சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன், அ. எ. வி. சங்கப் பொதுச செயலாளர் இ. பேரினப நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'உங்களுக்கு ஈழத்தமிழினம் என்றும் கடமைப்பட்டுள்ளது; உங்களது உதவியை என்றைக்கும் நாம் மறக்கமாட்டோம்!' என்று இவ்விருந்து முடிவில் திருமதி அமிர்தலிங்கம் டாக்டரிடம் கூறியபோது, 'இது என் கடமையும்கூட' என்று சிரித்துக்கொண்டே டாக்டர் ராமமூர்த்தி பதிலளித்தார். டாக்டருக்கு அன்பளிப்பாக சில பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை எம்.பி.யின் மற்றுேர் சண்டித்தனம்

வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் செய்த பாவத்தின் பயனுக பாராளு மன்ற உறுப்பினராகிவிட்ட தியாகராகா பொறுப்பான பதவியில்தான் இருப்பதைப் புரிந்துகொள்ளாது பொலீஸ் பாதுகாப்புடன் சண்டியனுக விரும்புகிருர் என்று மக்கள் பேசிக்கொள்வதை ஊர்ஜிதம் செய்யும்பொருட்டு கடந்த 6-4-77ல் அவரது தொகுதியில் அராலியில் இன்ெருரு சம்பவம் நடந்தேறியது.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய புதிய கட்டிடத் திறப்பு விழாவும், புதிய மேல்மாடிக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவும் மேற்படி வித்தியாலய திறந்த வெளி அரங்கில் குறிப்பிட்ட தினத்தில் பல நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக கலகலப்புடன் நடந்த விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட தியாகராஜராலேயே திருஷ்டி பரிகாரமும் செய்யப்பட்டதாம்.

அரசியல் சார்பற்றதாகக் கருதப்பட்ட இவ்விழாவிற்குப்பெருங்கூட்டம் எதிர்பார்க்கப்பட்டது. பாடசாலை விவகாரமாதலால் குறைந்தபட்சம் அப்பாடசாலை மாணவ மாணவிகளும் பெற்ருேரும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்பட்டது. விழாவிற்குத் தவருது சமூகமளிக்கவேண்டுமென்று சில ஆசிரியர்கள் வீட்டுக்கு வீடு சென்று பெற்ருேரை வேண்டிக்கொண்டும் பயன் பூஜ்யமாகத்தான் இருந்ததாம்.

அரசியல் சார்பற்ற விழாவைத் தனது தேர்தல் பிரசார மேடையாகப் பாவிக்கும் நோக்குடன் வந்திருந்த பா. உ. தியாகர் விழாவின் இடைநடுவில் எழுந்து விடைபெற்ருர். அத்துடன் அவர் போயிருந்தால் அவர் சாதாரண எம். பி.யாக மாத்திரத்தான் இருந்திருப்பார். அவர் சண்டியன் எம்.பி. யாக விரும்பினுரோ என்னவோ அரங்கைவிட்டு வெளியே வந்து காரில் ஏறப்போகும் சமயம் விழாவிற்குச் சமூகமளிக்காமல் தெருவிலே வேடிக்கை பார்த்துக் கொண்டுநின்ற தனக்குத் தெரிந்த அராலிக்கருணு எனப்படும் கருணுகரன் என்ற வாலிபனைக் கண்டதும் தியாகருக்கு என்ன தோன்றிற்ருே என்னவோ வழக்கமான தனது சண்டித்தனத்தை அவ்வாலிபன்மேல் காட்டினுராம். பொலிசார் பக்கத்திலே நிற்பதையும் பொருட்படுத்தாது எம்.பி" யின் மேனியில் அவ்வாலிபனும் கைவைக்கவே 'அரஸ்ட்கிம்' என்று பொலிசாரை நோக்கிக் கத்திருராம் திகைத்துப்போன தியாகர். அடுத்தகணம் அவ்விடத்தை நோக்கி வாலிபர் கூட்டம் படையெடுக்கவே தப்பினேம் பிழைத்தோம் என்று காரில் ஏறி ஓடினுராம் தியாகர். ஒன்றும் புரியாத பொலிசார் திகைத்து நின்றனராம். ஏன் வாலிபனுடன் வலுச்சண்டைக்குச் சென்ருர்? இப்போது பனியும் இல்லையே காரணம் என்ன என்பது அவரது எடுபிடிகளுக்கும் புரியவில்லை.

ஒரு பொறுப்பான பதவியில் இருக்கும் ரொம்பப் படித்த கனவான் ஒருவர் பொலிசாரின் உதவியுடன் தெருச்சண்டியனுக விரும்பினுல் சாதாரண மக்கள் வரிசையில் அவருக்கு சீற் ஒதுக்குவதே வெட்கம், அவரைப்போய் பிரதம விருந்தினராக அழைத்தோமே என்றும் சிலர் பேசிக்கொண்டனர். மேற்படி விழா குழப்பத்தில் முடிவதற்கு தியாகர் தான் காரணம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர்.

'தியாகர் எனக்கு நன்கு அறிமுகமான ஒருவர்தான் அதற்காக அவர் அரசியலிலும் பின்பற்றி மக்களிடம் அவமானப்பட வேண்டுமா?' என்பது சம்பந்தப்பட்ட வாலிபனின் குரல்.

மேற்படி விழா குழம்புவதற்குத்தானே காரணமாகிவிட்டதை அறிந்த தியாகர் அவமானத்தால் குன்றிப்போனுராம்.

## கருத்தரங்கு

த. வி. கூ. கொழும்புக்கிளை நடாத்தும் வாராந்தக் கருத்தரங்கு 20-4-77 புதன்கிழமை பம்பலப்பிட்டி லோறிஸ் வீதியில் உள்ள 51ம் இலக்க இல்லத்தில் நடைபெறும். கிளைத்தலைவர் ஈழவேந்தன் தலைமைதாங்கும் இக்கருத்தரங்கில் சட்டத்தரணிகள் கரிகாலன், கே. தேவராஜா, ஆர். விஜயேந்திரா ஆகியோர் 'அனைத்துலக நடுவர்குழு வெளியிட்டுள்ள அறிக்கை' பற்றி கருத்துரை வழங்குவர்.

## பிரார்த்தனை

தமிமீழ விடுதலைவேண்டி மகளிர் பேரவை கொழும்புக்கிளை நடத்தும் வாராந்தப் பிரார்த்தனை 22-4-77 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்.

## ஒலிக்கப்போகிறது உண்மைக் குரல்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இயக்கப் பிரசார ஏடாகக் காவலூரிலிருந்து 'உண்மைக்குரல்' எனும் ஏடு விரைவில் வெளிவரும். 'பொய்களையும் புரட்டுக்களையும் கற்பனைக் கதைகளையும் ஒதுக்கி உண்மையை நிலைநாட்டுதற்கு 'உண்மைக் குரல்' ஒலிக்கத் தொடங்கும்.

## கோவிற்குளம் நாடகவிழா

கோவிற்குளம் இந்து இளைஞர் மன்றத்தினர் எதிர்வரும் 29-4-77ல் மாபெரும் நாடகவிழா வொன்றை நடத்துதற்கு ஒழுங்குகள் செய்துவருகின்றனர்.

வண்ணை ஆனந்தன் தலைமையில் யாழ்/கோண்டாவில்சன சமூக நிலையத்தினரின் 'இதய தாகம்' மாந்தையூர் நவரச கலா மன்றத்தினரின் 'காதலும் கண்ணீரும்' கோவிற்குளம் இந்து இளைஞர் மன்றத்தினரின் 'கிழவியா? குமரியா? ஆகிய நாடகங்கள் அன்றையதினம் மேடையேறவுள்ளன.

நாடகவிழாவுக்கான ஏற்பாடுகளை இந்து இளைஞர் மன்றத்தலைவர் திரு. அ. சிற்றம்பலம் செயலாளர் பொன். இராமநாதன் ஆகியோர் மிகத் தீவிரமாகக் கவனித்து வருகின்றனர்.

கோவிற்குளத்தின் சரித்திரத்திலேயே முதற் தடவையாக நடைபெறவிருக்கும் இந் நாடக விழாவை பொது மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உடப்பூர் இந்து இளைஞர் மன்ற புதிய நிர்வாகிகள்.

உடப்பு இந்து இளைஞர் மன்றத்தின் ஈராண்டுப் பூர்த்திவிழா உடப்பு இந்து இளைஞர் மன்ற பணிமனையில் தலைவர் செல்வன் வீரசொக்கன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட தெரிவு அறங்காவல்களாக :- கா. வாசக மூர்த்தி வீரசொக்கன் பெ. சோமாஸ்சுந்தர். ஆகியோரும். தலைவர்:- இராவேலாயுதம் செயலாளர் :- க. தயானந்தன். பொருளாளர்;- பெ. வீர பத்திரன். இணைத்தலைவர்:- வி. வேலாயுதம். இணைச்செயலாளர்:- ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக வை. ஆறுமுகசாமி. மா. சுகுமாரன். இ. சிவநாதன் பிள்ளை, த, சச்சிதானந்தசிவம்; சோ. வைரையா, வி. காளிதாஸ், ஐ. சாந்தகுமாரன் பெரி. ஐயமுத்து. ஆகியோர் நடப்பு வருடத்தின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பாலர் வகுப்பு

13-4-77 காலை 9.30 மணிக்கு பலாலியில் இலவச பாலர் வகுப்பு ஒன்று காங்கேசன்துறை மகளிர் பேரவையினுல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


## 'திருக்குறள் மணிகள்'

(பொருட்பால்)

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட்சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


# எந்தக்கட்சியும் இணையலாம் தொகுதி ஒதுக்கும் பேச்சுக்கு இடமேயில்லை!

16-4-77ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தமிழர் சுயாட்சிக் கழகத்தை இணைக்க சட்டத்தரணி திரு. வரதாராசனும் அருமைநாதனும் மேற்கொண்டுள்ள முயற்சி பற்றி செயலதிபர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறினுர். தேர்தல் தொகுதிகள் பற்றி எவ்வித பேச்சுக்கும் இடமில்லை என தாம் அவர்களுக்குக் கூறியதாகவும் தேர்தலைப்பற்றிப் பேசாமல் இணைப்பதைப் மட்டுமே பேசுதற்கு அவர்கள் விரும்புவதாகவும் அவர் கூறினுர். இந்தப் பேச்சுவார்த்தையை நடத்த மூன்றுபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

## காவலூர் மக்கள் தீர்மானம்

## கா. பொ. வே

## எங்கள்

## பிரதிநிதி

'மிகவும் பின்தங்கியநிலையிலுள்ள எங்கள் ஊர்காவற்றுறைத்தொகுதியின்தேவைகளை நிறைவேற்றியும், தொகுதி மக்களின் குறைகளையும முறையீடுகளையும் நாள் முழுவதும் கேட்டு நடவடிக்கை எடுத்தும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் கிளைகளையும் இளைஞர் பேரவையின் கிளைகளையும் எங்கும் நிறுவுதற்கு உதவியும தமிழர் விடுதலைக்கூட்டணியின் போராட்டங்களிலும் இயக்கப்பணிகளிலும் கலந்தும் தடுப்புக்காவலில் இருந்தும், கற்குடாத் தொகுதியின் தலைமை அமைப்பாளராகப் பெருந்தொண்டாற்றியும், பாராளுமன்றத்தில்ல கேள்விகள், ஒத்திவைப்பு வினுக்கள், பேசசுக்கள் என்பவற்றிலே முன்னணியில் நின்று உழைத்தும், விடுதலை இயக்க வளர்ச்சிக்காகப் பல நூல்களை வெளியிட்டும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் கட்சியின் கொறடாவாகப்பணியாற்றியும், தமிழ்மொழி உரிமைகளை நிலைநாட்டியும் முழுநேர ஊழியராக அஞ்சாமலும் அசையாமலும் உழைத்தும், ஏனைய தொகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்தற்கு உதவியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியில்சேர்ந்து வயிறு வளர்ப்போருக்கும் ஏனைய அரசியல் எதிரிகளுக்கும் தலையடி கொடுத்தும் பணியாற்றும் எங்கள்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களுக்கு இத்தொகுதிக் கிளை நன்றியும் பாராட்டும் தெரிவிப்பதுடன் அவரை எதிர்வரும் தேர்தலிலே போட்டியின்றி வெற்றிபெறச் செய்வதற்காக இயன்ற முயற்சிகளை மேற்கொள்வதென்றும் அன்று நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கின்றது.

இத்தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் நாயகத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது. 20. 2. 77 இல் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி ஊர்காவற்றுறைத் தொகுதி மத்திய கிளை திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் செய்து வரும் பணிகளைப் பாராட்டி எதிர்வரும் தேர்தலில் போட்டியின்றி அவரை வெற்றிபெறச் செய்வதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதென்றும் முடிவுசெய்தது.

## தொண்டர்கள் தேவை தொடர்புகொள்க

"தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியைச் சேர்ந்த மொழிவழித் தொழிற்சங்கங்களும் த. வி. கூட்டணியும் ஒன்றிணைந்து யாழ்நகரில் நடத்த விருக்கும் மேநாள் ஊர்வலத்தில் அலங்கார ஊர்திகளும் இடம் பெறவிருக்கின்றன. ஊர்திகளில் தமிழ் மக்களின் தொழில் வளங்களையும் கலை கலாச்சாரங்களையும் பிரதிபலிப்பனவாக அமையும்.

"ஊர்வலம் மருதனமடம் சந்தியில் மே முதலாம் திகதி பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக யாழ். முற்ற வெளியை சென்றடையும். மேற்படி ஊர்வலத்தில் அலங்கார ஊர்திகள் கொண்டுவர விரும்புபவர்களை இம்மாதம் 25ம் திகதிக்குப் பிந்தாமல் த. வி. கூ. செயலகத்தில் மே நாள் அமைப்புக்குழுவின் துணைச் செயலாளர் திரு. டீ. சிவமகாராசா அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்"

"மேலும் இம் மேதினத் தன்றும் அதற்குமுந்திய தினங்களிலும் மேதின ஒழுங்குகளை கவனிப்பதற்கு சுமார் 200 தொண்டர்கள் தேவைப்படுகின்றனர். தொண்டர் களாக தம்மை பதிவு செய்து கொள்ளவிரும்புகிறவர்கள் உடனடியாக த. வி. கூட்டணி அலுவலத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

—இவ்வாறு திரு. இ. பேரின்பநாயகம் விடுத்த அறிக்கையொன்றுகூறுகிறது

## முல்லைத் தீவு தமிழ்இளைஞர்பேரவை அமைப்பு!

16ம் திகதி முல்லைத்தீவு தமிழ் இளைஞர் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பொன். சத்தியசீலனும் வண்ணைஆனந்தனும் கலந்து கொண்டனர். 17ம் திகதி வவுனிக்குளம் பனம்காமம் தமிழ் இளைஞர் பேரவைக் கருத்தரங்கில் திரு. சத்தியசீலன் பங்கு பற்றி பேசினுர். அக் கூட்டத்தில் இனியும் தமிழர்கள் கட்சி அடிப்படையில் சிந்திக்காது தமிழர் கூட்டணி என்ற அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் அப்படி கட்சி ரீதியில் சிந்திப்பவர்கள் சுயநலவாதிகள் என்றும் தமிழ் இளைஞர்கள் இத்தகைய தீய சக்திகளையிட்டு கவனமாக இருக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்திரை வந்தனள்!

சித்திரை வந்தனள் — சித்திரை வந்தனள்
கொத்தடிமைத்தனம் — கூண்டோடு மாய்ந்திட
சித்திரை வந்தனள் — சிரியடி பெண்ணே!
இத்தரைமீது என் தமிழ்ச்சாதி
புத்தொளி பரப்பி புதுவாழ்வு அமைத்திட
சத்தியம் வென்றிட — சாந்தி நிலைத்திட
சித்திரை வந்தனள் — சிரியடி பெண்ணே!

* * *

இளவேனில் வந்தது — இனிமை தவழ்ந்தது
குவலயம் எங்கும் குதூகலம் மலிந்தது
விடுதலைவேட்கை வீறுபெற்றெழுந்தது
தமிழச்சாதி தன்னை உணர்ந்தது
தனித்தமிழ்ஈழம், தனித்தமிழ்ஈழம்
அதுவே இன்றைய தாரக மந்திரம்!
அதுவே தமிழனின் உயிரும் உடம்பும்!
விடிவு நமக்குத் தெரியுது எதிரே!
அதனால்—
சித்திரை வந்தனள் — சிரியடி பெண்ணே!

* * *

கோலவண்டினம் யாழிசைத்தது
குண்டுமல்லிகை பூத்துச் சொரிந்தது
சோலையெங்கணும் கிளிகள் கொஞ்சின
சுகந்தருதென்றல் மெல்லத்தழுவின
மாமரங்களோ பூத்துக்காய்த்தன!
மனமகிழ்ச்சியில் குயில்கள் கூவின!
ஏழைமாந்தரும் எழுச்சிபெற்றனர்!
இனியமாதரார் முகம்மலர்ந்தனர்!

* * *

மஞ்சள் பூசி, மல்லிகை சூடி
மணநாள் வருமா என்று நெஞ்சேங்கி
சித்திரை வந்திடின் மெத்தைச் சுகம்வரும்
என்றெதிர்பார்த்திடும் ஏந்திழையார் மனம்
பொங்கிட நெஞ்சில் புதுப்புனல் பாய்ந்திட
காதல்நெஞ்சம் களிப்பினிலாடிட
கலவி நினைப்பினில் கவலைகள் ஓடிட
கன்னியர் எழுப்பிடும் 'கலகல' ஓசையில்
வந்தனள் சித்திரை வாழிய நீடே!

* * *

சாதிகள் மாய்ந்திட சனநாயகம் ஓய்ந்திட
பேதங்கள் ஓடிட, பிரிவினை தீர்ந்திட
நீதிகள் நிலைத்திட, நியாயங்கள் வாழ்ந்திட
ஓர்குலமாகி, ஓர்இனமாகி
ஈழத்தமிழர், எழுச்சி மிகப்பெற்று
மானத்தைப்பேணி, மரபுவழிகாத்து
ஈனத்தனம் போக்கி, எங்கள் தமிழ்ஈழத்தை
வாழவைப்பாரென்று வந்திடுக சித்திரையே!

* * *

எங்கள் மூச்சொன்றே — அதுவே தமிழ்ஈழம்
எங்கள் நினைவொன்றே — அதுவே தமிழ்ஈழம்
எங்கள் செயலொன்றே — அதுவே தமிழ்ஈழம்
எங்கள் வாழ்வொன்றே — அதுவே தமிழ்ஈழம்
எங்கள் உயிரொன்றே — அதுவே தமிழ்ஈழம்!

* * *

மூதறிஞர் நலம்பெற்று
முழுநிலவாய் எழுந்திருந்து
ஈழத்தமிழர்
எதிர்கால வாழ்வுக்கு
தானைத்தளபதியாய்
தக்க வழிகாட்டுதற்கு
ஈசனை வேண்டி
எழுந்தருள்வாய் சித்திரையே!

* * *

சித்திரை பிறந்தனள் — சிறுமை தொலைந்தது
அற்பமனம் அழிந்தது — அழுக்காறு தீர்ந்தது
சுயநலமும் சூதும் — சொந்தக் குரோதங்களும்
காட்டிக்கொடுக்கின்ற கயமைநிகழ்ச்சிகளும்
மளமளென்று சாயட்டும்! மங்கலமே பொங்கட்டும்!
இல்லாமை ஏழ்மை, வறுமைபிணி தொலைந்து
என்தமிழ் மக்கள் ஏற்றம் பெற்றிட
சித்திரையாளே! உன்திருவடியை தொழுகின்றேன்

— கோவை மகேசன்

---

● தமிழ்பேசும் முஸ்லிம்களுக்கு

# விழிப்புணர்வு ஊட்டியவர் தந்தை செல்வா அவர்களே!

## அவர் வழி தொடர்ந்து தமிழ் ஈழம் காண தமிழ் ஈழத்து முஸ்லிம்கள் தயார் தயார்!

அரசியல் இலாபம் கருதி, ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள், சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தமிழ் பேசும் முஸ்லிம்களை அடகு வைக்க முனைந்து கொண்டு வருகின்றனர்.

இப்பொழுது, முஸ்லிம்களின் பெயரில் சில்லறை நோக்கு அரசியல்பேசி, ஒரு சில முகவரியில்லாதவர்கள் புற்றீசலாக, தேசிய ஐக்கியம் பேசி கட்சிகளை அமைத்துக்கொண்டிருப்பதாக ஏடுகளில் நோக்குகிறேன்.

கடந்த கால் நூற்றுண்டுகளாக, முஸ்லிம்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை தனிப்பெருந் தலைவர் தந்தை செல்வாவையும் தமிழரசுக் கட்சியையுமே சாரும்.

நிந்தாவூர்த்தொகுதி எம். எம். முஸ்தபா, கல்முனைத் தொகுதி முதலியார் காரியப்பா, பொத்துவில் தொகுதி அப்துல் மஜித், மூதூர்த்தொகுதி, முஹம்மதலிபோன்றவர்களையும், எம். ஸி. அகமது, லத்தீப் சின்னலெப்பை இன்னும் பல அரசியல்வாதிகளையும், நாடாளுமன்றத்துள் குடிபுகச்செய்த மாபெரும் தலைவர் தந்தை செல்வாவே தான், இதையாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

முன்னாள் மூதவைக்கு ஜனாப் மசூர்மௌலானாவை ஏற்றிவைத்து மருதமுனைக்குப்பெரும் புகழும் தேடித் தந்தவர்களே தமிழரசுக் கட்சியினர்தாம். தந்தை செல்வாவிடமும் தமிழரசுக் கட்சியிடமும் அரசியல் மாணுக்கராக இருந்த முஸ்லிம்கள் சிலர் இன்று, சிங்கள ஏகாதிபத்தியங்களுக்கு 'சர்வர்களாக' இருக்கின்றனரே, இவர்கள் முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்கவோ, கட்சிகள் அமைக்கவோ அருகதையுள்ளவர்களா?

புத்தளத்துப் பள்ளி ஜும்மாத் தொழுகையின்போது, பொலிசாரை ஏவிவிட்டு, ஆறு உயிர்களைக் குடித்து ஏப்பம் விட்டார்களே சிங்கள ஏகாதிபத்திய வாதிகள் அப்போது, இந்த, முஸ்தபா எங்கே போனார்? அகமது எங்கே போனார்? மூதூர் மஜீத் எங்கே போனார்? இஸ்லாமிய சோஷலிசம் பேசி முஸ்லிம்களுக்குமாயாசாலம் காட்டிவரும், பதியுதீன் மஹ்மூத் எங்கே போனார்? இவர்களெல்லாம், முஸ்லிம்களின் தலைவர்களா? சிங்களச் சர்வாதிகாரிகளின் சர்வர்களாகக் குசினிகளில் ஓடி ஒழிந்து கொண்டார்களா?

'முஸ்லிம்களும் தமிழர்களும், பெரும்பான்மைச் சிங்களவர்களோடு ஐக்கியப்பட்டு வாழவேண்டும், என்ற தோரணையில் பேசி வரும் இவர்கள், மேலும் மேலும், தமிழர்களையும், முஸ்லிம்களையும், சிங்களச் சர்வாதிகாரிகளுக்குப் பலியிட ஆசைப்படுகிறார்களா?

சிங்கள ஏகாதிபத்தியம் முஸ்லிம்களின் பாரம்பரியமான, கொண்டை வெட்டான் பிரதேசத்தில், சிங்கள மக்களைக் குடியேற்றிடவும், அம்பாறை என்ற நாமத்தில் சிங்களத் தொகுதியாக்குதற்கும் உடந்தையாய் இருந்து இதுகாறும் உதவி செய்து கொண்டிருக்கும் மஜீதோ, முஸ்தபாவோ, அஹமதோ, முஸ்லீம்களுக்குத் தலைமை தாங்கி அரசியலில் வழி நடாத்த அருகதையுள்ளவர்களா?

மூதூர், தோப்பூர், கிண்ணியா ஆகிய முஸ்லிம்களின் பிரதேசத்தில், சிங்கள ஏகாதிபத்திய வாதிகளைக் குடியேற்றி, சேருவாவிலை, என்று சிங்களவர்களுக்குத்தொகுதியாக்கிக்கொடுத்த அப்துல் மஜீத் எந்த மனத்தூய்மையோடு முஸ்லிம்களைச் சிங்களவர்களோடு ஐக்கியமாக வாழச்செப்புகிறார்? மூதூர் மஜீதுதான் சிங்கள எஜமானர்களின் சர்வர் அடிமை கூலிக்காரர்? எங்களையுமா அடிமையாக்கப்பார்க்கிறார்?

இந்தச் சந்தர்ப்பவாத முஸ்லிம் தலைவர்களின் கபட நாடகங்களை நம்பி இனி மேல் எந்த ஒரு முஸ்லிம் புத்திஜீவிகளும் சிங்கள ஏகாதிபத்தியச் சர்வாதிகாரிகளோடு சேரப்போவதில்லை.

எங்கேயோ இருந்த சிங்களவர்களை வலிந்து கூட்டி வந்து, அல்லை, கந்தளாய், திருமலை, மூதூர், கிண்ணியா ஓட்டமாவடி வாழைச்சேனை ஏறூவூர், மட்டக்களப்பு கொண்டை வெட்டான், போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் அத்துமீறிக் குடி ஏற்றியது மில்லாமல் எங்களின் நிலங்களைப் பகற்கொள்ளை அடிக்கச்செய்து கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளை, அரசியலிலிருந்து முற்று முழுதாகத் தூக்கி எறிய ஆயத்தமாக இருக்கிறோம்.

தந்தை செல்வா ஆணையிட்டதற்காக அம்பாறை தொடக்கம் புத்தளம்வரையிலும் உள்ள முஸ்லிம்கள், மன்னார்தொடக்கம் யாழ்ப்பாணம் வரையுள்ள முஸ்லிம்கள், தமிழீழம் அமைக்க இதோ விழித்தெழுந்து விட்டோம். வெற்றிபெறுவோம் தமிழீழம்!

— மருதூர்வாணன்

---

# பொதுத் தேர்தல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு

'எதிர்வரும் தேர்தல் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவது மட்டுமல்ல இத்தேர்தல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக அமையும். நாம் பல சிங்களக் கட்சிகளுடன் உடன்படிக்கை செய்தோம். ஒத்துழைப்புக் கொடுத்தோம். இறுதியில் ஏமாற்றப்பட்டோம். ஆகவே, இழந்த ஆட்சியை நாம் மீட்கவேண்டும்.' இவ்வாறு கிரானில் நடந்த கருத்தரங்கில் தமிழர் விடுதலை கூட்டணி பிரமுகரும், அமரர் மாணிக்கவாசகரின் மருமகனுமாகிய திரு. சி. சம்பந்தமூர்த்தி கூறினர். மற்றும் திருவாளர்கள்: த. கோவிந்தசாமி மத்திய குழு செயலாளர், அ. ஆறுமுகம் வந்தாறுமூலை த. வி. கூ. தலைவர், இ. பத்மநாதன் அமைப்பாளர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். மேலும் வாழைச்சேனை, கறுவாக்கேணி, கிண்ணையடி ஆகிய இடங்களில் கருத்தரங்குகள் நடத்துவதற்கு, மத்தியகுழு செயலாளர், திரு. த. கோவிந்தசாமி அக்கிராமங்களிலுள்ள இளைஞர்களுடன் தொடர்பு கொண்டு ஒழுங்குகள் செய்துவருகிறார்.

---

# புவக்பிட்டியாவில் மீண்டும் காடைத்தனம்

புதுவருட தினத்தன்று குடிபோதையில் இருந்த இரு சிங்கள இன வெறி காடையர்களால் புவாக்பிட்டியாவில் ஒரு தமிழ் கடை அடித்து நொறுக்கப்பட்டதாம். தங்களது காயங்களுக்கு மருந்து கட்டபோன போது, பூட்டப்பட்டிருந்த தமிழ் டாக்டருக்கு சொந்தமான 'மக்கள் வைத்திய சாலை'யின் கதவுகள் இந்த வெறியர்களால் அடித்து நொறுக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர் என்ற காரணத்தினால் சில மாதங்களுக்கு முன்பும் ஒருமுறை இவ்வைத்திய சாலையின் கதவுகளும் பெயர்ப்பலகையும் உடைத்து எறியப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களாக இங்குள்ள இந்து ஆலயத்தில் கடமை புரிந்து கொண்டிருந்த, மட்டக்களப்பு பகுதியைச்சேர்ந்த அர்ச்சகர் ஒருவரும் துரத்தியடிக்கப்பட்டுள்ளார். சோசலிசம் சமத்துவம்பற்றி மேடைகளில் பேசப்படும் இந்நாட்டில் தாண்டவமாடும் இனவெறி இதுதான் என்று இங்குள்ள தமிழர்கள் பேசுகிறார்கள்.

---

# பொத்துவில் த. இ. பே. புனரமைப்பு

பொத்துவில் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை மத்திய குழுவின் இரண்டாண்டு நிறைவையொட்டி மத்தியகுழு புனருத்தாரனம் செய்யப்பட்டது.

இக்கூட்டம் 10-4-77 ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் எஸ். கிருபைராசா அவர்களின் இல்லத்தில் த. தருமரெத்தினம் அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய மத்திய குழு நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டனர்.

பொத்துவில் தொகுதி த. இ. பேரவை அமைப்பாளராக பொன். கோபாலன் ஏகமனதாக மீண்டும்தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவர்: த. தருமரெத்தினம்— தம்பிலுவில் உப தலைவர்கள் வி. கமலநாதன் காரதீவு, சீ. சுந்தரலிங்கம் பொத்துவில், செயலாளர்: ம. தருமலிங்கம் அக்கரைப்பற்று, உப செயலாளர்: சீ. வே. சிவஞானம் திருக்கோவில், பொருளாளர்: பொ. ஜெகரெத்தினம்கோமாரி.

நிர்வாக சபை உறுப்பினர்களாக: க. பொன்னம்பலம் (கோளாவில்) பொன். லோகநாதன் (பனங்காடு) வே. தில்லைநாயகம் (விநாயகபுரம்) த. கா. நாதபிள்ளை (தாண்டையடி) த. கனகசபை (தம்பட்டை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் இதன் அடுத்த மத்தியகுழுக் கூட்டம் 30-4-77 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அக்கரைப் பற்று த. வி. கூட்டணி செயலகத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமமூர்த்தியின் ஆலோசனைகள்

மூதறிஞர் செல்வாவின் மூளை நரம்பு' வேகமாக செயற்பட்டு, அவருக்கு சீக்கிரத்தில் அறிவு தெளிவு பெறுவதற்கு சென்னை டாக்டர் பேராசிரியர் ராமமூர்த்தி பின்வரும் சில புதிய சிகிச்சை முறைகளை தெரிவித்துள்ளார்.

● தந்தை செல்வா படுத்திருக்கும் கட்டிலின் அருகே நாதஸ்வர இசையை ஒலிப்பதிவு நாடாவில் மென்மையாக இசைக்க வேண்டும். செல்வா, ஓர் இசைப்பிரியர் என்பதால் இசையின் ஒலி அலைகள், அவரது மூளையை சுறுசுறுப்படையச் செய்யக்கூடும். இதனால் அவர் விரைவாக அறிவு பெறலாம்.

● செல்வாவை பகலில் நித்திரை செய்வதற்கு ஒரு மணித்தியாலத்திற்குமேல் அனுமதிக்கக்கூடாது. அடிக்கடி அவரது கை கால்களை அசைத்து விடுவதுடன் 'ஐயா, ஐயா' என்று கூப்பிடவேண்டும்.

● Lucidrill என்ற புதிய குளிகை மருந்து ஒன்று அமெரிக்காவில் கிடைக்கிறது. இந்த மருந்தை அமெரிக்காவிலிருந்து எடுப்பித்து செல்வாவுக்கு கொடுக்கவேண்டும்.



# கருணாநிதியின் உதவிக்கு அமிர்தலிங்கம் நன்றி!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இன்று (18-4-77) பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை வருமாறு:—

'தந்தை செல்வா அவர்களை பார்வையிட்டு அவருக்கு விசேட வைத்திய ஆலோசனை வழங்கும் பொருட்டு உலகப் பிரசித்தி பெற்ற மூளை நரம்பு வைத்திய நிபுணர் பேராசிரியர் பி. ராமமூர்த்தி அவர்கள் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் ஈழம்வாழ் தமிழ்இனம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் ஆற்றிய சேவையானது தமிழ்மக்கள் உள்ளத்தில் என்றென்றும் நன்றியுணர்ச்சியோடு நினைவு கூரப்படவேண்டியது.

இவ்விடயத்தில் இனப்பற்றோடு பணிபுரிந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் தி. மு. க.வின் தலைவருமான டாக்டர் மு. கருணாநிதி அவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றி உரித்தாகுக. கலைஞர் அவர்களின் வேண்டுகோளின்படியே அவரது ஒத்துழைப்புடன் தாம் இங்கு வருகை தந்ததாக பேராசிரியர் ராமமூர்த்தி அவர்கள் கூறியமை தந்தை செல்வா மீது கலைஞர் கொண்டிருக்கும் மதிப்பையும், நீங்காத பற்றையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

மேலும் இவ்விடயமாக ஒத்துழைத்து வேண்டிய உதவிகளை உடனுக்குடன் நல்கிய இந்திய, இலங்கை அரசாங்கங்களுக்கும் த. வி. கூட்டணி சார்பிலும், நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## தி.மு.கழகச்செல

—1-ம் பக்கத் தொடர்

திங்கள் காலை சென்னை திரும்பினார்.

டாக்டர் ராமமூர்த்தியின் ஆலோசனையைப் பெற தந்தை செல்வாவுக்கு சிகிச்சை அளித்துவரும் டாக்டர் கப்ராலும், ஏனைய டாக்டர்களும் விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்தே, அவரை இங்கு அழைக்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன், கொழும்பிலிருந்து 16-4-77 சனி மாலை சென்னையிலுள்ள திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களுடன்தொலைபேசியில்தொடர்புகொண்டு டாக்டர் ராமமூர்த்தியை இலங்கைக்கு அழைப்பது பற்றி கலைஞருடன்பேசினார்.

தந்தைசெல்வா அவர்களின் சுகவீனம் பற்றிக் கேள்வியுற்ற கலைஞர் அவர்கள் துடிதுடித்துப்போனார். அவரது நிலைமைபற்றி விபரமாக விசாரித்தார்.

கலைஞர் கருணாநிதிக்கும், டாக்டர் ராமமூர்த்திக்கும், சுதந்திரன் ஆசிரியருக்குமிடையே நடைபெற்ற தொடர்பான தொலைபேசிப் பேச்சுக்களையடுத்து, டாக்டர் ராமமூர்த்தி உடனடியாக இங்கு வர சம்மதம் தெரிவித்ததுடன், அவரை இங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செலவிலேயே அனுப்பி வைப்பதாக கலைஞர் தெரிவித்தார்.

இலங்கை, இந்திய அரசாங்கங்களும் தமது வழமையான பிரயாண சட்டதிட்டங்களை தளர்த்தி, டாக்டர் ராமமூர்த்தியின் வருகைக்கு ஒத்துழைப்பு நல்கின.

இதையடுத்தே டாக்டர் ராமமூர்த்தி 17-4-77 காலை திருச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விமான மூலம் வந்திறங்கினார்.

## புதியநோய்கள்...

—1-ம் பக்கத்தொடர்

டாக்டர் கப்ராலும் யாழ் மருத்துவமனைடாக்டர்களும் தாதிமார்களும் எடுத்துவருகின்ற முழுமுயற்சிகளாலேயே தந்தை செல்வாவை இன்று உயிருடன் பார்க்க முடிவதாகவும் டாக்டர் ராமமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசி மூலம் கொழும்பிலிருந்த டாக்டர் கப்ராலுடன் தொடர்பு கொண்டு தந்தை செல்வாவின் நிலைமைப் பற்றி டாக்டர் ராமமூர்த்தி பேசினார்.

யாழ் மருத்துவ மனையிலேயே கடந்த 29 நாட்களாக தங்கியிருந்து தனது கணவரின் உடல் நிலையை அக்கறையுடன் கவனித்து வரும் திருமதி செல்வநாயகத்துக்கும் டாக்டர் ராமமூர்த்தி ஆறுதலும், நம்பிக்கையும் தெரிவித்தார்.

டாக்டர் ராமமூர்த்தி 18-4-77 காலை பலாலியிலிருந்து விமானமூலம் தாயகம் திரும்பினார் அவரை தந்தை செல்வாவின் புதல்வர் சட்டத்தரணி திரு. சந்திரகாசன், திருமதி சந்திரகாசன், சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், இரா. வடிவேற்கரசன், வண்ணை ஆனந்தன், சிவமகராசா ஆகியோர் விமான நிலயத்தில் வழியனுப்பி வைத்தனர்.

## திருமதி செல்வா அறிக்கை!

மூதறிஞர் தந்தை செல்வாவின் துணைவியாரான திருமதி செல்வநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:—

'எனது கணவருக்கு சிகிச்சை அளித்துவரும் டாக்டர் எஸ். ஏ. கப்ராலுடன் நடத்திய கருத்துப் பரிமாறலின் போது மற்றொரு பரிசோதனைக்கு எனது கணவரை உட்படுத்தும் யோசனையை டாக்டர் கப்ரால் வரவேற்றதை அறிய முடிந்தது.

சென்னை மூளை நரம்பு சிகிச்சை நிலையத்தின் பேராசிரியர் டாக்டர் ராமமூர்த்தியைக் கொண்டு இந்தப் பரிசோதனையை நடத்தலாம் என அவர் யோசனை கூறினார். இந்த யோசனையை அடுத்து இலங்கை அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் இலங்கையில் உள்ள இந்தியத் தூதருடனும், சென்னையில் உள்ள எமது நண்பர்களுடனும் தொடர்பு கொண்டு சகலரது ஒத்துழைப்புடனும் டாக்டர் ராமமூர்த்தியை இங்கு நாம் வரவழைக்க முடிந்தது.

'எனது கணவரின் சிகிச்சை குறித்து பேராசிரியர் ராமமூர்த்தி ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து டாக்டர் கப்ரால் தொடர்ந்து சிகிச்சை அளிப்பார். பேராசிரியர் ராமமூர்த்தியின் வருகையை ஒழுங்குசெய்ய நடவடிக்கை எடுத்த அனைவருக்கும் எமது நன்றிகள்!'

## வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் விளக்கம்!

கடந்த 1-4-77ல் வவுனியாவில் பொதுமக்கள் மீது நடைபெற்ற பொலிஸ் தாக்குதலையடுத்து வவுனியா மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. சேனரத் கூட்டிய சமாதான மாநாட்டின்போது நடைபெற்ற சம்பவங்களுக்காக தாம் வருத்தம்தெரிவித்தாரே தவிர மன்னிப்புக் கோரவில்லையென்று வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி. என். டி. சில்வாதெரிவிக்கிறார். 6-4-77 சுதந்திரனில் திரு. சில்வா மன்னிப்பு கோரியதாக நமது வவுனியா நிருபர் எழுதியிருந்ததையடுத்தே மேற் கண்ட விளக்கத்தை திரு. சில்வா தந்திருக்கிறார்.

## தமிழர் விடுதலை...

— 1ம் பக்கத்தொடர்

இந்த இலட்சியத்துக்காகவே கூட்டணி போராடும் என்றும், கூட்டணியின் முக்கிய தலைவர் ஒருவர் ஜே. ஆரிடம் தெரித்விதபோது, தமிழ் ஈழ இலட்சியத்தை எந்த ஒரு அரசும் ஏற்காது என்று ஜே. ஆர். தெரிவித்தாராம்.

இதற்குப் பதிலளித்த மேற்படி கூட்டணித் தலைவர், 'தமிழ்ஈழ கோரிக்கையை எப்படி ஏற்க வைக்கிறதென்பது எங்களுக்குத் தெரியும்—அதை நாங்கள் ஏற்கவைப்போம்' என்று சுடச்சுட ஜே. ஆருக்கு 'சூடு' கொடுத்தாராம்.

## திருமலை 10ம் குறிச்சி த. வி. கூ. கிளை நிர்வாகிகள்

19-3-77ல் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி பத்தாம் குறிச்சி கிளையின் பொதுச் சபைக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட த. வி. கூட்டணி நிர்வாக உத்தியோகத்தர் வருமாறு:

தலைவர் — திரு. இ. நவரெட்ணம். உபதலைவர்கள்— திரு. இ. நாகராசா, திரு. சு. ஜெயரெட்ணம் திரு. மு. கோதண்டபாணி. செயலாளர்—திரு. சி. சச்சிதானந்தவேல், உபசெயலாளர் – திரு. சி. சந்திரசேகரம் பொருளாளர் – திரு. சி. கந்தசாமி. எட்டுபேர் கொண்ட செயலவையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வாள் வீமன் நாட்டுக்கூத்து

வடமாகாணத்தில் பல இடங்களில் போட்டியிட்டுப் பரிசுபெற்ற புதுவை அற்புதாலயா கலாமன்றத்தைச் சேர்ந்த "குமணன்" கலைஞர்கள் 25-4-77ல் புத்தூரில் வாள் வீமன் என்னும் நாட்டுக்கூத்தை மேடையேற்றுகிறார்கள்.


வாங்கிவிட்டீர்களா?

சுடர்

3வது ஆண்டு மலர் இப்போது எங்கும் விற்பனையாகிறது

விலை ரூபா 1-50



இப்போது விற்பனையாகிறது!

தமிழேந்தல் ஈழவேந்தன் எழுதிய

தமிழ்மண் காப்போம் தாயகம் மீட்போம்

3-ம் பதிப்பு

அதிக பக்கங்கள் — விலை ரூபா ஒன்று மட்டுமே

நாவண்ணன் எழுதிய

தமிழன் சிந்திய இரத்தம்

விலை ரூபாய் 1-50 மட்டுமே.

● பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா.உ. எழுதிய

தடுப்புக் காவலில் 10 நாட்கள்

விலை ரூபா ஒன்றுமட்டுமே

விபரங்களுக்கு தொடர்புகொள்க:

நிர்வாகி

சுதந்திரன் வெளியீட்டகம்

194 ஏ, பண்டாரநாயகா வீதி

கொழும்பு-12

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

ராஜன் புத்தகசாலை

இல: 12 பஸ் நிலையம்

யாப்பாணம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஏப்ரல் மாதம் 20-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org